# சென்னை டிஎம்எஸ்–வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் சேவையையும் தொடங்கி வைத்தார்




திருப்பூரில் நடந்த விழாவில், சென்னை டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி கொடி அசைத்து துவக்கிவைத்தார். அருகில், கவர்னர் பன்வாரிலால் புரோகித், முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன்.

திருப்பூர், பிப்.11: வரும் 2022ம் ஆண்டுக்குள் அனைத்து ஏழை மக்களுக்கும் வீடு கட்டி கொடுக்கப்படும் என பிரதமர் மோடி பேசினார். முன்னதாக சென்னை டிஎம்எஸ்-வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் சேவையையும் தொடங்கி வைத்தார்.

திருப்பூர் பெருமாநல்லூரில் நேற்று தமிழக அரசு சார்பில் நலத்திட்ட உதவிகள் மற்றும் மத்திய அரசின் நிதியிலிருந்து தொடங்கப்படும் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழா நடந்தது. விழாவுக்கு கவர்னர் பன்வாரிலால் புரோகித் தலைமை வகித்தார். முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில், வீடியோ கான்பரன்சிங் முறையில் சென்னை கே.கே. நகரில் 470 படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவமனை மற்றும் மருத்துவக்கல்லூரியை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். சென்னை டி.எம்.எஸ். - வண்ணாரப்பேட்டை வரையிலான மெட்ரோ ரயில் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

திருச்சி விமான நிலைய விரிவாக்கப்பணிகள், அதிநவீன வசதிகளுடன் சென்னை விமான நிலைய விரிவாக்கப்பணி, சென்னை முதல் மணலி வரை ஆயில் செல்லும் பைப்லைன் பணிகள், திருப்பூர் சிறுபூலுவப்பட்டி பகுதியில் 7.46 ஏக்கர் நிலப்பரப்பில் 100 படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவமனை கட்டுமான பணிக்கான அடிக்கல் நாட்டும் பணியை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

பின்னர், கோவை, திருப்பூர், நீலகிரி, பொள்ளாச்சி, சேலம், கரூர், ஈரோடு, நாமக்கல் ஆகிய 8 நாடாளுமன்ற தொகுதிகளை சேர்ந்த பா.ஜ.க. பூத் கமிட்டி நிர்வாகிகள் பங்கேற்ற பொதுக்கூட்டம் பெருமாநல்லூரில் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் மாநில தலைவர் தமிழிசை வரவேற்றார்.

கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

இன்று தமிழகத்தில் பல்வேறு முன்னேற்ற திட்டங்கள் துவங்கப்பட்டுள்ளது. திருச்சி விமான நிலையத்தில் தற்போது 500 பயணிகள் மட்டுமே வந்து செல்ல முடியும். இன்று அடிக்கல் நாட்டியுள்ள ஒருங்கிணைந்த கட்டிடம் பயன்பாட்டிற்கு வந்தால் 3 ஆயிரம் பேர் பயண வசதி பெற முடியும். திருப்பூர், சென்னையிலும் இ.எஸ்.ஐ மருத்துவமனை திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த திட்டங்கள் அனைத்தும் தமிழக மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும்.

தற்போது செயல்படும் மத்திய அரசின் அணுகுமுறை வித்தியாசமானது. எந்தெந்த முறைகளில் தேவைகளை பூர்த்தி செய்ய முடியுமோ அவற்றை செய்து வருகிறது. நாட்டில் 2 பாதுகாப்பு தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்பட உள்ளது. அதில் ஒன்று தமிழகத்தில் அமைகிறது. அப்படி அமையும்போது, ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவார்கள். 40 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு பதவி ஒரு

13ம் பக்கம் பார்க்க...